Insert your school crest here

# *Tell Them From Me* student survey:

## Information and consent form for parents and carers

# *Tell Them From Me* மாணவர் மதிப்பாய்வு:

## பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல் மற்றும் ஒப்புதல் படிவம்

அன்புள்ள பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களே,

இந்தத் தவணையில், எங்கள் பாடசாலை Tell Them From Me (*என்னிடமிருந்து அவர்களுக்குக் கூறுங்கள்*) எனும் மாணவர் மதிப்பாய்வில் பங்குபற்றுகிறது. எங்கள் மாணவர்கள் பாடசாலை வாழ்க்கையைப் பற்றி என்ன நினைக்கிறார்கள், அவர்கள் பாடசாலையுடன் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருக்கிறார்கள், மற்றும் ஆசிரியர்கள் அவர்களுடன் தொடர்புகொள்ளும் வெவ்வேறு வழிமுறைகள் பற்றிய பெறுமதிவாய்ந்த பின்னூட்டங்களை இந்த மதிப்பாய்வு எங்களுக்கு வழங்கும்.

இந்த மதிப்பாய்வானது, The Learning Bar என்ற பாடசாலை-அடிப்படையிலான மதிப்பாய்வுகளில் நிபுணத்துவம் பெற்ற ஒரு சுயாதீன ஆய்வு நிறுவனத்தால் நடத்தப்படுகின்றது.

இம் மதிப்பாய்வானது எங்கள் மாணவர்களிடமிருந்து பின்னூட்டங்களைப் பாடசாலைக்கு வழங்குவதோடு, ஒரு பரந்த நோக்கத்தையும் கொண்டுள்ளது. இது, தொடர்ச்சியான பாடசாலை மேம்பாட்டிற்காக Centre for Education Statistics and Evaluation மூலமாக Department of Education-க்கு மாணவர் நலன்கள், பங்குபற்றல், மற்றும் திறன்வாய்ந்த கற்பித்தல் நடைமுறைகள் ஆகியவை தொடர்பில் உள்நோக்குப் பார்வையை வழங்குகிறது. நியூ சவுத் வேல்ஸ் முழுவதிலும் இருந்து பெறப்படும் அடையாளம் காணப்படாத மாணவர் தரவைப் பயன்படுத்தி இது மேற்கொள்ளப்படுகிறது.

இந்த மதிப்பீடானது **இரகசியமானது**, மேலும் பாடசாலைகளிலுள்ள ஊழியர்களால் தனிப்பட்ட மாணவர்களை அவர்களின் பதில்களிலிருந்து அடையாளம் காண **முடியாது**.

இரகசியத்தன்மையை உறுதிப்படுத்த, தனித்துவமான ஒரு பயனர்பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பங்கேற்கும் மாணவர்கள் பெறுவார்கள். ஒரு கேள்விக்கு ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் பதிலளிக்கும் பட்சத்தில் மட்டுமே அத் தகவல் அறிக்கைப்படுத்தப்படும்.

அனைத்துத் தகவல்களும் தொடர்புடைய தனியுரிமைச் சட்டத்தின்படி கையாளப்படும். மாணவர்களின் தனிப்பட்ட தகவல்கள், சட்டப்படி தேவைப்பட்டாலே தவிர, வேறு எந்த நபருக்கும் அல்லது அமைப்புக்கும் திணைக்களத்தால் வெளியிடப்பட **மாட்டாது**. எந்தவொரு பிரசுரத்திலும் தனிப்பட்ட மாணவர்கள் அடையாளம் காணப்பட மாட்டார்கள்.

இந்த மதிப்பாய்வானது இணையவழியில் (ஆன்லைனில்) இடம்பெறும். இதற்கு 15 முதல் 30 நிமிடங்கள் வரை எடுக்கும். மேலும், இது பாடசாலை நேரங்களில் பாடசாலையில் நடைபெறும். எங்கள் மாணவர்கள் மதிப்பாய்வை முடித்த சிறிது நேரத்தில் எங்கள் பாடசாலையின் மதிப்பீட்டு முடிவுகள் குறித்த அறிக்கை ஒன்றை நாங்கள் பெறுவோம்.

இம் மதிப்பாய்வில் பங்கேற்பது **தன்னார்வமானது**. மதிப்பாய்வுக் கேள்விகளில் எவையேனும் உங்கள் பிள்ளைக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தினால், உங்கள் பிள்ளை அந்தக் கேள்வியைத் தவிர்க்கலாம் அல்லது எந்த நேரத்திலும் மதிப்பாய்வினை நிறுத்திக்கொள்ளலாம்.

**உங்கள் பிள்ளை/பிள்ளைகள்** இந்த மதிப்பாய்வில் **பங்கேற்பதை நீங்கள் விரும்பவில்லை** எனில், தயவு செய்து இணைக்கப்பட்டுள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து அதை delete and insert date of return -ஆம் திகதியளவில் பாடசாலைக்குத் திருப்பி அனுப்பவும்.

இம் மதிப்பாய்வு மற்றும் ஆய்வுகள் பற்றிய அதிகளவான தகவல்கள் education.nsw.gov.au/ttfm என்ற தளத்தில் ஆங்கில மொழியில் கிடைக்கின்றன.

delete and insert name of principal

அதிபர்

delete and insert name of school

## *Tell Them From Me* Student Survey non-consent form

## *Tell Them From Me* மாணவர் மதிப்பாய்வுக்கு ஒப்புதல்-அளிக்காமைக்கான படிவம்

உங்கள் பிள்ளை இப் பின்னூட்ட மதிப்பாய்வில் பங்கேற்பதை நீங்கள் **விரும்பவில்லை** எனில், தயவுசெய்து இந்தப் படிவத்தில் கையொப்பமிட்டு அதை delete and insert date of return -ஆம் திகதியளவில் பாடசாலைக்குத் திருப்பி அனுப்பவும்.

***என்னிடமிருந்து அவர்களுக்குக் கூறுங்கள்* மாணவர் மதிப்பாய்வில்** எனது பிள்ளை/பிள்ளைகள் பங்கேற்பதற்கு நான் ஒப்புதல் **வழங்கவில்லை.**

| | |
|---|---|
| 1-வது மாணவரின் பெயர் | 1-வது மாணவரின் வகுப்பு |
| 2-வது மாணவரின் பெயர் | 2-வது மாணவரின் வகுப்பு |
| 3-வது மாணவரின் பெயர் | 3வது மாணவரின் வகுப்பு |
| 4-வது மாணவரின் பெயர் | 4-வது மாணவரின் வகுப்பு |

பெற்றோர்/பராமரிப்பாளரின் பெயர்

பெற்றோர்/ பராமரிப்பாளரின் கையொப்பம்

திகதி